# பத்திரிக்கைசெய்தி

**முன்னாள் உதவிபொறியாளர், சென்னைபெருநகரகுடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் வாரியம், பிரிவு-35, எம்.கே.பிநகர், சென்னைஅவர்கள் ரூ.9,000/-லஞ்சம் கேட்டு பெற்று கொண்டதற்கக்காக இரண்டு ஆண்டு கடுங்காவல் தண்டனை மற்றும் ரூ.1,000/- விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.**

கடந்த2011ம் ஆண்டு, சென்னை எம்.கே.பிநகரை சேர்ந்த புகார்தாரர் திரு.எம்.ஆர்.சீனிவாசன் என்பவர் தனது பழைய வீட்டை இடித்துவிட்டு புதிய வீட்டைகட்டி புனரமைப்பு செய்யும் போது ஏற்கனவே இருந்த குடிநீர் மற்றும் கழிவு நீர் இணைப்புகள் துண்டிக்கப்பட்டன. அவர் தன்னுடைய புதியவீட்டை கட்டி முடித்ததும், 2011 செப்டம்பர் மாதத்தில் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் வாரியம், பிரிவு-35, எம்.கே.பிநகர், சென்னைக்கு சென்று எதிரி திரு.வி.மனோகரன், உதவிபொறியாளர் அவர்களை சந்தித்து தனக்கு மீண்டும் கழிவுநீர் இணைப்பு வழங்குமாறு கோரியுள்ளார். அதற்கு எதிரி வி.மனோகரன், கழிவு நீர் இணைப்பு வழங்க புதிய விண்ணப்பத்தை சமர்பிக்க வேண்டும் என்றும்அதற்காக சாலையை தோண்ட அனுமதி பெற சென்னை பெருநகர மாநகராட்சிக்கு பரிந்துரை கடிதம் வழங்க ரூ.10,000/- கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். 03.10.2011 அன்று புகார்தாரர் எதிரியை நேரில் சந்தித்தபோது, எதிரி லஞ்சத்தொகையை ரூ.10,000-லிருந்து ரூ.9,000 ஆக குறைத்து கேட்டபோதிலும் புகார்தாரர் லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லாததால் எதிரியின் மீது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னையில் அளித்த புகாரின் பேரில் எதிரி மீது குற்றஎண். 07/AC/2011/CC-II U/s. 7 of Prevention of Corruption Act,1988 படி 03.10.2014ம் தேதி வழக்குபதிவு செய்யப்பட்டது. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறையினரின் பொறிவைப்பு நடவடிக்கையின் போது எதிரி திரு.மனோகரன் புகார்தாரரிடம் ரூ.9,000/- லஞ்சம் கேட்டுவாங்கும் போது அரசு சாட்சிகள் முன்னிலையில் கையும்

களவுமாக பிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இவ்வழக்கில் விசாரணை முடித்து எதிரி திரு.மனோகரன் மீதுU/s. 7, 13(2) r/w.13(1)(d)of Prevention of Corruption Act,1988 கீழ் கணம் சிறப்பு நீதிமன்றம் ஊழல் தடுப்பு சட்டம், சென்னை 18.03.2013 அன்று இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. இவ்வழக்கில் சாட்சிகளை விசாரித்த சிறப்பு நீதிபதி, சென்னை அவர்கள் எதிரி மனோகரன், புகார்தாரரிடம் ரூ.9,000/- லஞ்சம் கேட்டு வாங்கியது உறுதி செய்து, பிரிவு 7 ஊழல் தடுப்பு சட்டம் 1998 கீழ் எதிரிக்கு ஒரு ஆண்டு கடுங்காவல் சிறைதண்டணையும் ரூ.1000/- அபராதம் செலுத்தவேண்டும், அபராதம் கட்ட தவறினால் மூன்று மாதம் எளிய சிறைதண்டணையும் மேலும்பிரிவு 13(2) r/w.13(1) (d)ஊழல் தடுப்பு சட்டம் 1998 கீழ் எதிரிக்கு இரண்டு ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டணையும் ரூ.1000/- அபராதம் செலுத்தவேண்டும் என்றும், அபராதம் கட்டதவறினால் மூன்று மாதம் எளிய சிறை தண்டணையும் விதிக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்விரு சிறை தண்டணைகளையும் ஏககாலத்தில் அனுபவிக்கவேண்டும் எனஉத்தரவிடப்பட்டுள்ளது.

**Press Report**

**Former AE, Chennai Metropolitan Water Supply and Sewerage Board, Division-35, MKB Nagar, Chennai has been convicted for the demand and acceptance of illegal gratification Rs.9,000/-**

In 2011, the complainant Tr.M.R.Srinivasan of MKB Nagar, Chennai demolished his old house and built a new house, and during the reconstruction period the existed Water & Sewerage connections were disconnected. On completion of the new house, in the month of sep-2011, the complainant had visited the O/o.Division-35 of CMWSSB, MKB Nagar and requested Tr.V.Manoharan, AE of Division -35 (accused) to restore the Sewerage connection. But the accused Tr.V.Manoharanasked the complainant to apply for a new connection and to pay bribe Rs.10,000/- to send a letter to Chennai Corporation for getting permission for road cutting. On 03.10.2011, though the bribe amount was reduced by the accused from Rs.10,000/- to Rs.9,000/-, the complainant was not ready to give bribe and lodged a complaint with Vigilance and Anti-Corruption. Based on the complaint, a case in Cr.No. 07/AC/2011/CC-II, u/s. 7 of PC Act 1988 was registered against Tr.V.Manoharan and in the trap laid against the accused, Tr.V.Manoharan was caught red-handed while demand and accepting the bribe amount Rs.9,000/- from the complainant in the presence of official witness who witnessed the entire trap operation. On completion of investigation, charge sheet was filed on 18.03.2013 against Tr.V.Manoharan u/s.7 and 13(2) r/w.13(1)(d) of PC Act 1988 before the Special Court for PC Act, Cases, Chennai. After successful prosecution of the case, today 31.03.2023, the Special Court Judge for PC Act cases, Chennai found Tr.V.Manoharan guilty for demand and acceptance of bribe of Rs.9,000/- from Tr.M.R.Srinivasan and convicted the accused to undergo Rigorous imprisonment for one year and shall pay a fine of

Rs.1,000/- and in default to undergo simple imprisonment for 3 months for the offence committed u/s 7 of PC Act and to undergo Rigorous imprisonment for two years and shall pay a fine of Rs.1,000/- and in default to undergo simple imprisonment for 3 months for the offence committed u/s 13(2) r/w 13(1) (d) of PC Act, 1988, and the sentence imposed shall go concurrently.